பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

**குளிர் களஞ்சியங்களுள்ள பண்டங்கள் காப்புறுதி**

## 1. காப்பீட்டு விடயதானம்

குளிர் களஞ்சியங்களுள்ள பண்டங்கள் காப்புறுதியானது, குளிர்சாதன இயந்திராதிகளுக்கு ஏற்படும் எதேச்சையானதும் எதிர்பாராததுமான தேங்களின் விளைவான குளிர் களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பண்டங்களின் சிதைவினால் ஏற்படும் நிதியியல் இழப்புக்கெதிராக பாதுகாப்பு வழங்குகின்றது

## 2. எதனைக் காப்பீடு செய்கின்றது?

வலுவான இயந்திராதிகள் செயலிழப்பு காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட குளிர்சாதன இயந்திராதிகளுக்கு ஏற்படும் திடீர் சேதத்தைத் தொடர்ந்து ஏற்படும் குறிப்பாக எதேச்சையான வெப்பநிலை ஏற்றம் அல்லது இறக்கம் என்பவற்றின் விளைவான குளிர் களஞ்சியங்களுள்ள பண்டங்களின் சிதைவு அல்லது சேதத்துக்கு குளிர் களஞ்சியங்களுள்ள பண்டங்கள் காப்புறுதி பாதுகாப்பு வழங்குகின்றது.

வெளிப்படுத்தப்பட்ட காப்புறுதி தொகை மற்றும் பிரயோகமாகத் தக்க நியதிகள், நிபந்தனைகளுக்கு அமைவாக, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டு'ள்ள பண்டங்களுக்கு இக்காப்பீடு பிரயோகமாகும்.

## 3. காப்புறுதி செய்யப்படாதன யாவை? (ஒரே பார்வையில்)

- தீ, மின்னல், வெடித்தல்.ஆகாய விமான தாக்கம், களவு, கட்டிடம் இடிந்து விழுதல், வெ ள்ளம், நீர் கசிவு, நிலநடுக்கம், மண்சரிவு, சூறாவளி, புயல், எரிமலை வெடிப்பு அல்லது அவ்வாறான அனர்த்தங்கள்.
- வழமைக்கு மாற்றமான பரிசோதனை, வன்முறையான அதிபாரமேற்றுதல் அல்லது பரிசோதனைகள்.
- காப்புறுதிப் பத்திர தொடக்கத்தின் போது அறிந்திருந்த குறைபாடுகளும் பிழைகளும்.
- முறையற்ற களஞ்சியப்படுத்தலும், பிழையான பொதியிடல், காற்றுச் சுழற்சி பற்றாக்குறை அல்லது சீரற்ற வெப்பநிலைகள்.
- உள்ளார்ந்த குறைபாடுகள், சுருங்குதல், இயந்கை சிதைவு அல்லது பண்டங்களில் பீடைகள்.

- காப்புறுதி வழங்குனரின் சம்மதமின்றி குளிர்சாதன இயந்திராதிகளுக்கு தற்காலிக திருத்தங்களை மேற்கொள்ளல்.
- தண்டங்கள், விளைவாந்தன்மையான இழப்புகள் அல்லது ஏதும் சட்டரிதியான பொறுப்பு.
- மின்சார செயலிழப்பு அல்லது பொது மின் வழங்களில் ஏற்ற இறக்கம்.

**4. காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை**

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

**5. காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்**

கோரிக்கையொன்றுக்கு வழிகோளத்தக்கதாக ஏற்படக் கூடிய ஏதும் சேதம் அல்லது சிதைவு பற்றியும், அத்துடன், பொறுப்பின் மட்டத்தை பாதிக்கக் கூடாதாக செயற்பாட்டு நிலைமைகளில் ஏதும் குறைபாடுகள் அல்லது மாற்றம் பற்றியும் பயார்பஸ்ட்டுக்கு உடனடியாக அறிளவிக்கப்பட வேண்டும்.

கோரத்தக்க சம்பவமொன்றின் போது, காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான நியாயாமான சகல முன்னெச்சரிக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும், கோரிக்கையை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள யாரும் மதிப்பீட்டாளர்கள், இழப்பு இயைபாக்குனர்கள் அல்லது விசாரணையாளர்களுடன் முழுமையான ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சேதத்தின் புகைப்படங்கள் உட்பட சம்பந்தப்பட்ட சகல ஆதார ஆவணங்களும், திருத்த வேலை மதிப்பீடுகளும் மற்றும் பாதிப்புக்குள்ளான அம்சங்களின் உரித்துரிமை சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**6. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்**

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎ +94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

7. **மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –**

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎+94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

8. **வேறேதும் தகவல்கள்**

விபத்து ஏற்படாவிடில் பண்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை விலைக்கும், சேதத்தின், சிதைவின் பின்னர் அவற்றை விற்றுக் கிடைக்கும் தொகைக்கும் வித்தியாசத்தின் அடிப்படையிலேயே இழப்பீடு அமையும்.

தவிர்க்கப்பட்ட சேத மட்டத்தின் பெறுமதி வரை, மேலும் சிதைவைத் தடுப்பதில் ஏற்பட்ட நியாயமான மேலதிக செலவுகளும் காப்பீடு செய்யப்படலாம். செலவுகள் அல்லது வட்டங்கள் போன்ற சேமிக்கப்பட்ட ஏதும் செலவினங்கள், கோரிக்கை செலுத்துகையில் இருந்தும் கழிக்கப்படும்.

காப்புறுதி தொகையானது, மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை விலையை விடவும் குறைவானதாக இருக்கும் பட்சத்தில், காப்புறுதி வழங்குனரின் பொறுப்பு விகிதாசாரமாக குறைக்கப்படும்.

**குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.